
# கல்வாரி பிம்பங்கள்



# கல்வாரி பிம்பங்கள்

இயேசுவில் பிரியமானவர்களே
இயேசுவின் சிலுவைப்பாதை, மானிட வரலாற்றைப் புரட்டிய,
சமூக மாற்றத்திற்கு வித்திட்ட ஒரு போராட்டப் பாதை.
இது என்றோ, எங்கோ நடந்து முடிந்த வரலாற்று நிகழ்வல்ல
நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் அன்றாடம் நடக்கும் வாழ்க்கைப் பாதை.
ஒவ்வொரு திருப்பலியும் இயேசுவினுடைய இராவுணவை,
அவரன்பின் பகிர்வை நமக்கு நினைவூட்டுவது போல,
தவக்காலத்தின் போது நாம் பங்கெடுக்கின்ற ஒவ்வொரு சிலுவைப் பாதையும்
இயேசுவினுடைய பாடுகளில் நம் ஒவ்வொருவரையும் இணைத்துக் கொண்டு
அவரோடு பயணிக்க நமக்கு உதவட்டும்.
இயேசுவின் பாடுகளில் அவரோடு உடன் நடந்தவர்கள்,
அவருக்கு உடனிருந்து உதவியவர்கள், அவர் நிலைகண்டு உருகியவர்கள்
என்று அனேகர் கல்வாரிப் பாதையின் பிம்பங்களாக நம் முன் காட்சியளிக்கிறார்கள்.
அந்த பிம்பங்களின் வழியாக இயேசுவின் பாடுகளை தியானிப்போம்
நம் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் மாற்றம் கண்டு
இயேசுவின் அன்புச் சீடராக இச்சிலுவைப் பாதையில் பங்கேற்று பயனடைவோம்.

**பழி பாவம் அறியா பரிசுத்த இறைவா**
**எம் பாவப்பிணி போக்க மருந்தானவா!**
**உனைத்தேடி வந்தேன், உன் பாதை நடந்தேன்**
**எனக்காக பலியாகும் என் இயேசுவே**
**உனைப்போல நிதம் வாழும் வரம் தாருமே. உனைத்தேடி வந்தேன்...**

## முதலாம் நிலை

# இயேசுவைத் தீர்ப்பிடுகிறார்கள்

**ஜெபம்** : இனிய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றி நிறைந்த அஞ்சலி செலுத்துகிறோம்.
அது ஏனென்றால், பாரமான சிலுவையை சுமந்து படைப்பனைத்தையும் மீட்டு இரட்சித்தீர்.

**பிலாத்து பேசுகிறான்** : நான் போந்தியு பிலாத்து பேசுகிறேன்...!
ஆம், இயேசுவைக் கொன்றவன் என்று இந்த உலகமே பழிதூற்றும்
அந்த போந்தியு பிலாத்துதான் பேசுகிறேன்...
நான் பதவி ஆசையின் காரணமாக, இயேசுவின் கொலைக்கு உடந்தையாக இருந்தவன் என்பதை ஒத்துக் கொள்கிறேன்.
ஆனால், குற்றமற்றவர் இயேசு என்பதை அறிந்து,

நான் அவரை விடுவிக்க வழிகளைத் தேடியபோது
நீதிமாளிகையின் அத்தனைக் கதவுகளையும் அடைத்தது யார்?
“அவனை சிலுவையில் அறையும்” என்று ஒலித்த உங்கள் குரலொலிகள் தானே!
சரி அது இருக்கட்டும்...
இயேசுவால் குணமடைந்த ஆண்கள், பெண்கள், தொழுநோயாளிகள்,
ஏன்... அவர் மிகவும் நேசித்த சீடர்கள்... என்று யாராவது ஒருவர்
சாட்சி சொல்ல வந்திருக்கலாமே.
அத்தனை பேரும் உயிருக்குப் பயந்து ஓடி ஒளிந்தார்களே... செய் நன்றி மறந்தவர்கள்.
நீங்கள் எப்படி? நீங்களும் என்னைப் போல் கைகளில் அழுக்கை வைத்துக் கொண்டு,
கண்ணாடிகளை சுத்தப்படுத்தும் வேலையைத் தான்
இன்னும் செய்து கொண்டிருக்கிறீர்களா?
உங்கள் மனசாட்சிகளில் படிந்திருக்கும் அநியாய ஒட்டடைகளை அகற்றுங்கள்.
நல்லவர்களுக்கு அநியாயத் தீர்ப்புகள் சொல்லி,
விமர்சனங்களால் கொன்ற காலம் எங்களோடு போகட்டும்.
உங்கள் விமர்சனங்கள் அடுத்தவர்களை வளர்த்தெடுப்பதற்கு மட்டும் பயன்படட்டும்.
உங்கள் தீர்ப்புகள் உடனிருப்பவர்களை நெறிப்படுத்துவதற்கும்,
உறுவாக்குவதற்கும் மட்டும் உதவட்டும்.

**மன்றாட்டு** : அன்பான இயேசுவே! எங்களுடைய சுயநலன்களுக்காக
அடுத்தவர்களை வதைக்கின்ற மனநிலையை எங்களிடமிருந்து நீக்கியருளும்.
உம்மைப் போன்று உறவை வளர்க்கும், வாழ்வை வளமாக்கும் வார்த்தைகளைப் பேச எங்களுக்கு வரமருளும்.

**ஜெபம்** : எங்கள் பேரில் தயவாயிரும் ஆண்டவரே எங்கள் பேரில் தயவாயிரும்
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால்
நித்திய சமாதானத்தில் இளைப்பாருவார்களாக.

**சுமந்தாயோ இறைவா, சுகமான சுமையாய்**
**எம் பாவம் சுமந்தாயோ இறை மைந்தனே**
**உனைத்தேடி வந்தேன், உன் பாதை நடந்தேன்,**
**எனக்காக பலியாகும் என் இயேசுவே,**
**உனைப்போல நிதம் வாழும் வரம் தாருமே. உனைத்தேடி வந்தேன்**

## இரண்டாம் நிலை

# இயேசுவின் மீது சிலுவை சுமத்தப்படுகிறது

**ஜெபம்** : இனிய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றி நிறைந்த அஞ்சலி செலுத்துகிறோம்.

அது ஏனென்றால், பாரமான சிலுவையை சுமந்து படைப்பனைத்தையும் மீட்டு இரட்சித்தீர்.

**சிலுவை பேசுகிறது :** நான் தான் இயேசுவின் தோள்களைத் தழுவியதாலேயே எல்லோரின் இதயங்களிலும் இடம்பிடித்த பாரமான சிலுவை பேசுகிறேன்…!
இறைவன் கனி தரும் மரங்களாகத் தான் எங்களைப் படைத்தார்…
ஆனால் இதயமற்ற மனிதர்கள்தான், எங்களை மரணக்கருவியாக உருமாற்றினார்கள்….! கருவறையில் மழலையைச் சுமக்கும் தாயைப்போல்,
கல்வி கற்க புத்தகப் பையைச் சுமந்து செல்லும் மாணவனைப் போல்,
என்னை விரும்பி ஏற்று கல்வாரி நோக்கி சுமந்து செல்கிறார் இறைமகன் இயேசு.
உலகில் வாழும் உங்களில் பலர்
தங்கள் அன்றாட சிலுவைகளையே சுமக்க விரும்புவதில்லை.
சற்று நேரம் சிந்தித்துப் பாருங்கள்!
நீங்கள் சுமக்கின்ற சிலுவைகள் உங்கள் தோள்களைத் தழுவியது எதனால்?
ஆடம்பர ஆசையால் வந்தது - கடன் சிலுவை,
ஊனுடலின் இச்சைகள் தயாரித்தது - நோய்ச் சிலுவை,
முயற்சியும், உழைப்பும் இல்லாமையால் வந்தது - வறுமைச் சிலுவை,
ஆணுரிமைத்தனத்தால் வந்தது - வரதட்சணைச் சிலுவை,
உறவுகள் பதுங்கியதால் வந்தது - முதுமைச் சிலுவை,
வாழ்வதற்கு உண்ணாமல், உண்பதற்காகவே வாழ்ந்ததால் வந்தது - உடல் சிலுவை….!
இப்படி நீங்களே உற்பத்தி செய்து கொண்ட சிலுவைகளை சுமக்க வருந்துவதேன்?
கலங்காதீர்கள்! சுமைதாங்கிகளின் தேவன் உங்களை சுமையெனக் கருதுவதில்லை.
உங்கள் சுமைகளை நாளும் இன்முகத்தோடு சுமக்க சிலுவைச் செம்மல் அருள்புரிவாராக.

**மன்றாட்டு :** எங்கள் சுமைகளைத் தாங்கிச் சுமந்த இயேசுவே!
நாங்கள் எங்கள் குடும்பப் பொறுப்புகளை, ஆற்ற வேண்டிய கடமைகளை,
சிலுவைகளாக எண்ணி உதறித் தள்ளாமல்
எங்கள் அன்றாட வாழ்வின் சிலுவைகளை உவந்து ஏற்று, சுமந்து வாழும் வரம் தாரும்.

**ஜெபம் :** எங்கள் பேரில் தயவாயிரும் ஆண்டவரே எங்கள் பேரில் தயவாயிரும்
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால்
நித்திய சமாதானத்தில் இளைப்பாருவார்களாக.

**விழுந்தாயோ இறைவா, மண் மீது விதையாய்**
**மனம் நொந்து துடித்தாயோ மரி மைந்தனே.**
**உனைத்தேடி வந்தேன், உன் பாதை நடந்தேன்**
**எனக்காக பலியாகும் என் இயேசுவே**
**உனைப்போல நிதம் வாழும் வரம் தாருமே. உனைத்தேடி வந்தேன்...**

## மூன்றாம் நிலை

# இயேசு முதல் முறையாகக் கீழே விழுகிறார்

**ஜெபம் :** இனிய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றி நிறைந்த அஞ்சலி செலுத்துகிறோம்.
அது ஏனென்றால், பாரமான சிலுவையை சுமந்து படைப்பனைத்தையும் மீட்டு இரட்சித்தீர்.

**நிலம் பேசுகிறது :** அகல்வாரைத் தாங்கும் நிலம் போல என்று சொல்வார்களே அந்த நிலம் தான் பேசுகிறேன்.
அகிலத்தைப் படைத்தவனையே அரவணைத்துக் கொள்ளும் வாய்ப்பு எனக்கு.
தாங்கி நிற்பதற்காக படைக்கப்பட்ட என் மேல், தடுக்கி விழுகிறார் இயேசு.
எது அவரை முகம் குப்புற விழுத்தாட்டியது?
தோள்களை அழுத்தி கீழே தள்ளிய சிலுவையின் பாரமா?
இல்லை, பரிதவிக்கவிட்டு பறந்து போன சீடர்களின் துரோகமா?
நடக்கப்பழகிய பருவத்தில் தடுக்கி விழாமல் நடைபழகியவர்கள் யாருமில்லை.
ஆனால் பழகப் பழக நடையைக்கூட்டி,
விழுவதைக் குறைப்பதில் தானே அர்த்தமிருக்கிறது, வாழ்வின் அனுபவம் பிறக்கிறது.
இன்று உங்களில் எத்தனை பேர்
உயிரையும், உறவுகளையும் சிதைக்கும் போதையில் விழுந்துகிடக்கிறீர்கள்?
உறவுகளையும், உணர்வுகளையும் வதைக்கும் காமத்தில் விழுந்துகிடக்கிறீர்கள்?
நம்பிக்கையையும், பாசத்தையும் தகர்க்கும் சந்தேகத்தில் விழுந்துகிடக்கிறீர்கள்?
மதிப்பையும், மரியாதையையும் குழைக்கும் தாழ்வு மனநிலையில் விழுந்துகிடக்கிறீர்கள்?
வீழ்வது தவறல்ல. ஆனால் என்னில் வீழ்ந்துகிடப்பதில் சுகம் கண்டுவிடுவது தான் தவறு.
விதையென விழுந்த உயிர் பயிரென எழுவது போல்,
மழையென விழுந்த நீர் மேகமாய் எழுவது போல்,
உங்கள் வீழ்ச்சிகளில் எழுச்சி காணுங்கள். வாழ்வதில் அர்த்தம் காணுங்கள்.
மண்ணில் வீழ்ந்தபோதும் மீண்டெழுந்த இயேசு உங்கள் எழுச்சிக்கு துணைபுரியட்டும்.

**மன்றாட்டு** : வீழ்ந்தபோதும் மீண்டெழுந்த இறைவா,
எங்கள் அன்றாட வாழ்க்கையில் நாங்கள் எங்கள் வார்த்தைகளிலும், செயல்களிலும்
வழுக்கி விழுவதை எண்ணி வருந்துகிறோம்.
உமைப்போல நாங்களும் எங்கள் வீழ்ச்சிகளில் துவண்டுவிடாமல்
துணிந்தெழுந்து பயணிக்க உமதருள் தாரும்.

**ஜெபம்** : எங்கள் பேரில் தயவாயிரும் ஆண்டவரே எங்கள் பேரில் தயவாயிரும்
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால்
நித்திய சமாதானத்தில் இளைப்பாருவார்களாக.

**மரி ஈந்த (ஈன்ற) மகனே, மனுமீட்ட சுதனே**
**நிலைகண்டு தவித்தாளோ மரியன்னையே**
**உனைத்தேடி வந்தேன், உன் பாதை நடந்தேன்**
**எனக்காக பலியாகும் என் இயேசுவே**
**உனைப்போல நிதம் வாழும் வரம் தாருமே. உனைத்தேடி வந்தேன்...**

## நான்காம் நிலை

# இயேசு தனது அன்னையை சந்திக்கிறார்

**ஜெபம்** : இனிய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றி நிறைந்த அஞ்சலி செலுத்துகிறோம்.
அது ஏனென்றால், பாரமான சிலுவையை சுமந்து படைப்பனைத்தையும் மீட்டு இரட்சித்தீர்.

**மரியன்னை பேசுகிறாள்** : உன் உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவும் என்று சொன்னார்களே
அந்த வாள்வீச்சில் இதயம் சிதைந்த மரியாள் பேசுகிறேன்.
கல்லால் எறிந்து கொல்லப்படுவோம் என்பதை அறிந்தும்,
இறையருளால் கருத்தரிக்க சம்மதம் தந்தது இதற்காகத் தானா?
பெத்தலையில் என் தலைமகனைப் பெற்றெடுக்க வீடு வீடாக ஏறி இறங்கியது,
இந்த பரிதாபக் கோலத்தில் என் பிள்ளையைப் பார்ப்பதற்குத் தானா?
ஏரோதின் கொலை வாளுக்கஞ்சி இயேசுவை சுமந்து எகிப்துக்கு ஓடியது,
இப்படி வீதியெங்கும் இரத்தம் சிந்தி வதைபடுவதை கண்கொண்டு காண்பதற்குத் தானா?
ஊட்டிய பாலெல்லாம் உதிரமாய் வடிந்தோட,
பெற்றெடுத்த நெஞ்சம் பெருந்துயரில் மிதக்கிறது.
எனதன்புப் பிள்ளைகளே! உங்கள் பிள்ளைகளைத் தொல்லைகளாகப் பார்க்கும்
குறுகிய மன வட்டத்திலிருந்து கடந்து வாருங்கள்.
உங்கள் நிராசைகளை உங்கள் பிள்ளைகளின் தோள்களில் சிலுவைகளாகச் சுமத்தி,

இரக்கமில்லாமல் அவர்களது ஞாயமான ஆசைகளையும்,
நிராசைகளாக்கும் போக்கினை அடியோடு மாற்றுங்கள்.
என்னைப்போல அவர்களது வாழ்க்கைப் பாதையை,
அவர்களே முடிவு செய்து கொள்ளும் பக்குவத்தில் அவர்களை வளர்த்தெடுங்கள்.
அவர்களது நிறைகளைப் பாராட்டி, குறைகளை சுட்டிக்காட்டி,
வளர்ச்சியில் தட்டிக் கொடுத்து, தளர்ச்சியில் தோள் கொடுத்து தூக்கி,
வாழ்க்கையில் உடன் நடந்து வழிகாட்டுங்கள். உங்கள் உறவுகள் உயிர் பெறட்டும்.

**மன்றாட்டு** : தாயான தெய்வமே
எங்கள் குடும்பங்களில் பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே புரிதல் மேம்பட,
உறவுகள் வலுப்பெற, உறவின் பாலமாய் இருந்து உதவிடுவாய்.

**ஜெபம்** : எங்கள் பேரில் தயவாயிரும் ஆண்டவரே எங்கள் பேரில் தயவாயிரும்
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால்
நித்திய சமாதானத்தில் இளைப்பாருவார்களாக.

**உதவாதோ உலகம் (உன்) நிலை கண்ட பின்னும்**
**தோள் தந்து சுமை போக்க மனுவானவா**
**உனைத்தேடி வந்தேன், உன் பாதை நடந்தேன்**
**எனக்காக பலியாகும் என் இயேசுவே**
**உனைப்போல நிதம் வாழும் வரம் தாருமே. உனைத்தேடி வந்தேன்...**

### ஐந்தாம் நிலை

## இயேசுவுக்கு சீமோன் உதவி செய்கிறார்

**ஜெபம்** : இனிய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றி நிறைந்த அஞ்சலி செலுத்துகிறோம்.
அது ஏனென்றால், பாரமான சிலுவையை சுமந்து படைப்பனைத்தையும் மீட்டு இரட்சித்தீர்.

**சீமோன் பேசுகிறார்** : வானத்து மழையை நம்பி விவசாயம் செய்து,
வாரிசுகளை வளர்த்தெடுப்பதற்காக, வயல்வெளிகளில் அறுவடை செய்து வாழும்,
சீரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் பேசுகிறேன்.
அன்றொருநாள் வயலுக்குச் சென்று வீடு திரும்புகையில், வீதியில் கண்டேன் இயேசுவை.
உடலெங்கும் இரத்தம் சொட்ட, காலிரண்டும் நிலைதடுமாற,
தள்ளாடித் தள்ளாடி தளர்நடைபோட்டு, சிலுவை சுமந்து சென்றது ஒரு செம்மறி.
கூட்டத்தில் ஆயிரம் பேர் நின்று வேடிக்கை பார்த்திருந்தும்,

தோளோடு தோள்கொடுத்து இயேசுவின் பாரம் சுமக்க அழைப்பு வந்தது ஏனோ என்னிடம்.
அன்று இயேசுவின் சிலுவையை சிலநூறு அடிகள் மட்டுமே சுமந்த என்னை
இன்று வரலாறு வாழ்த்துகிறது. வானுலகம் போற்றுகிறது.
சக மனிதனுக்கு ஒரு தேவையென்றால்
மடைதிறந்த வெள்ளம் போல் தேடிச் சென்று உதவுவது தானே மனிதம்.
நீங்கள் எப்படி? அண்டை வீட்டில் தீப்பிடிக்கும் வேளையில்,
அணைக்கட்டும் சென்று ஆறுதல் சொல்வோம், என்று அமைதி காக்கும் கூட்டமா நீங்கள்?
துயரம் வந்தால் தூரப் போகும் உறவுகளாக இல்லாமல்,
நெருங்கிச் செல்லும் நெஞ்சங்களாக மாறுங்கள்.
தவித்து வருவோர்க்குத் தண்ணீர் பந்தலாய்,
களைத்து வருவோர்க்கு ஆலமர நிழலாய் வாழுங்கள்.
உண்மை உறவுகள் உங்கள் வாழ்வை வளமாக்கட்டும்.

**மன்றாட்டு** : துன்ப வேளையில் எங்கள் ஆறதலே இறைவா
பார இதயத்தோடு வருபவர்களுக்கு பரிவோடு செவிமடுத்து
ஆபத்தில் இருப்பவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி, துணை நிற்கும்
உயர்ந்த உள்ளத்தை எங்களுக்குத் தந்தருளும்.

**ஜெபம்** : எங்கள் பேரில் தயவாயிரும் ஆண்டவரே எங்கள் பேரில் தயவாயிரும்
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால்
நித்திய சமாதானத்தில் இளைப்பாருவார்களாக.

**கண்ணீரில் நனைந்து தள்ளாடும் இதயம்**
**வதைபட்ட வதனத்தைத் துடைத்தார்களோ**
**உனைத்தேடி வந்தேன், உன் பாதை நடந்தேன்**
**எனக்காக பலியாகும் என் இயேசுவே**
**உனைப்போல நிதம் வாழும் வரம் தாருமே. உனைத்தேடி வந்தேன்...**

## ஆறாம் நிலை

# இயேசுவின் முகத்தை வெரோணிக்காள் துடைக்கிறார்

**ஜெபம்** : இனிய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றி நிறைந்த அஞ்சலி செலுத்துகிறோம்.
அது ஏனென்றால், பாரமான சிலுவையை சுமந்து படைப்பனைத்தையும் மீட்டு இரட்சித்தீர்.

**வெரோணிக்காள் பேசுகிறாள்** : நான் வெரோணிக்காள் பேசுகிறேன்.
அன்றுவரை இயேசுவை நான் பார்த்தது கூட கிடையாது.
அவர் குருடர்களைத் தொட்டுப் பார்வை கொடுப்பவர்,
முடவர்களை எழுந்து நடக்கச் செய்பவர்,

நோயுற்றோரை தொட்டு குணப்படுத்துபவர்,
பாவிகளை மீட்க அவர்களோடு உறவாடுபவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.
இயேசுவைக் காணவேண்டும் என்ற பேரன்பும், பேராவலும் கொண்டிருந்த பேதை நான்.
ஆனால், வெறிபிடித்த வேட்டை நாய்களின் கோரப்பற்களால்,
குதறப்பட்ட ஆட்டுக்குட்டியைப் போல், இரத்த வெள்ளத்தில் அவரைக் காண்பேன்
என்று கனவில் கூட நான் நினைத்ததில்லை.
இரத்தமும், வியர்வையும் இமை நனைத்து, இயேசுவின் முகம் மறைத்த நிலையில்,
உருகுலைந்த அவர் முகத்தை துணி கொண்டு துடைத்தெடுத்தேன்.
தோழர்களே, பிறர் முகத்தில் கரி பூச எப்பொழுதும் கையில் கறையோடும்,
பிறர்வாழ்வில் குறைகாண, எப்பொழுதும் வாயில் குறையோடும் அலைபவர்களா நீங்கள்?
தன் வாழ்வைத் தரமாக வாழாமல்,
பிறர் வாழ்வில் குறைகாண்பவர்களெல்லாம் உத்தமர்களாகிவிட முடியாது.
பிறர் முகத்தையும், பிறர் வாழ்வையும் சீரழிப்பதையும், சீர்குழைப்பதையும் விட
சீர் தூக்கிப்பார்ப்பதிலும், சீர்படுத்திப் பார்ப்பதிலும் தானே பெருமை.
கறை களைந்து, துயர் துடைத்து இனியவராய் வாழ்ந்திருங்கள்.

**மன்றாட்டு** : எங்களுக்காக இன்னியிர் ஈந்த இயேசுவே
எங்கள் கோழைத்தனத்தை விலக்கி, வெரோணிக்காளைப் போல
தேவையில் இருக்கின்ற ஒவ்வொருவருக்கும் எங்களால் இயன்றதைச் செய்து
அன்போடு உதவிடும் தாராள மனதையும், மனிதநேயத்தையும் நிறைவாகத் தந்தருளும்.

**ஜெபம்** : எங்கள் பேரில் தயவாயிரும் ஆண்டவரே எங்கள் பேரில் தயவாயிரும்
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால்
நித்திய சமாதானத்தில் இளைப்பாருவார்களாக.

**கல் மீது நடந்து கல்வாரி அடைய**
**விழுந்தாலும் எழுந்தாயே வினை போக்கவா**
**உனைத்தேடி வந்தேன், உன் பாதை நடந்தேன்**
**எனக்காக பலியாகும் என் இயேசுவே**
**உனைப்போல நிதம் வாழும் வரம் தாருமே. உனைத்தேடி வந்தேன்...**

### ஏழாம் நிலை

# இயேசு இரண்டாம் முறையாக கீழே விழுகிறார்

**ஜெபம்** : இனிய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றி நிறைந்த அஞ்சலி செலுத்துகிறோம்.

அது ஏனென்றால், பாரமான சிலுவையை சுமந்து படைப்பனைத்தையும் மீட்டு இரட்சித்தீர்.

பாடல்: சிலுவை சுமக்கின்றேன்

**மன்றாட்டு :** துவளாது துணிவோடு பயணித்த இறைவா,
எங்கள் பாதைகளில் கோடி தடை வந்தபோதும்
உம் துணை கொண்டு எதிர்கொள்ளும் துணிந்த உள்ளம் தந்தருளும்.

**ஜெபம் :** எங்கள் பேரில் தயவாயிரும் ஆண்டவரே எங்கள் பேரில் தயவாயிரும்
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால்
நித்திய சமாதானத்தில் இளைப்பாருவார்களாக.

**உமக்காக அழுதோம் மெழுகாகக் கரைந்தோம்**
**எமக்காக சிலுவைக்கு பலியானவா**
**உனைத்தேடி வந்தேன், உன் பாதை நடந்தேன்**
**எனக்காக பலியாகும் என் தெய்வமே**
**உனைப்போல நிதம் வாழும் வரம் தாருமே. உனைத்தேடி வந்தேன்...**

### எட்டாம் நிலை

# இயேசு எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் சொல்கிறார்

**ஜெபம் :** இனிய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றி நிறைந்த அஞ்சலி செலுத்துகிறோம்.
அது ஏனென்றால், பாரமான சிலுவையை சுமந்து படைப்பனைத்தையும் மீட்டு இரட்சித்தீர்.

எருசலேம் பெண் **பேசுகிறார் :** கொஞ்சம் கொஞ்சமாக எண்ணெய் தீர்ந்து
அணையப்போகும் விளக்கைப்போல காட்சி தரும் இயேசுவைப் பார்த்து
உள்ளம் உடைந்து அழுத எருசலேம் பெண்களில் ஒருத்தி நான்.
பெண்களின் குரல் எந்தக் காலத்தில் செவிகொடுத்துக் கேட்கப்பட்டிருக்கிறது.
படைத்தவனையே வதைக்கின்ற உலகமல்லவா இது?
இதில் பலவீனமான படைப்புகளாக பச்சை குத்தப்பட்டிருக்கும் எங்கள் குரல் எடுபடுமா?
கண்களுக்கு முன்னால் கடவுளே காயப்படும் போது கண்ணீர் விடாமல் இருக்கமுடியுமா?
இருந்தாலும் கதறி அழுத எங்களைப் பார்த்து
எனக்காக அழாதீர்கள், உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்
என்று மொழிந்தார் இயேசு.

அதன் அர்த்தம் என்ன என்று, அன்று எனக்குப் புரியவில்லை. ஆனால், இன்று தொலைக்காட்சிப் பெட்டிகளுக்குள் வாழ்க்கையைத் தேடிக்கொண்டிருக்கும் பெண்களையும்
காட்சி ஊடகங்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் குழந்தைகளையும்,
இச்சைகளுக்காக பெண்மையையும், குழந்தைகளையும் கொச்சைப்படுத்தும் ஆண்களையும்
பெண்களுக்கு உரிய சமஉரிமையும், இட ஒதுக்கீடும் வழங்க
ஆண்டாண்டு காலமாக பரிசீலனை செய்து கொண்டிருக்கும் அரசுகளையும், எண்ணித்தான்
இயேசு அப்படிச் சொல்லியிருப்பாரோ?
சமுதாய வளர்ச்சியின் அடித்தளம் குடும்பமென்றால்
குடும்ப வளர்ச்சியின் ஆணிவேர் பெண்கள்.
பெண்களையும், குழந்தைகளையும் மதிக்கும் சமுதாயத்தை உருவாக்குங்கள்
உங்கள் மனித சமூகம் எழுச்சி பெறட்டும்.

**மன்றாட்டு** : சமத்துவத்தின் நாயகனே இறைவா!
இறைவனின் படைப்பில் ஆணும், பெண்ணும் சமம் என்ற ஆழமான உண்மையை நாங்கள் உணர்ந்து, எந்நாளும் மதித்து வாழ உமதருள் தாரும்.

**ஜெபம்** : எங்கள் பேரில் தயவாயிரும் ஆண்டவரே எங்கள் பேரில் தயவாயிரும்
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால்
நித்திய சமாதானத்தில் இளைப்பாருவார்களாக.

**மலைமீது சிலுவை சுமந்தாயோ சுதனே**
**சுமைதாங்கி விழுந்தாயோ தரைமீதிலே**
**உனைத்தேடி வந்தேன், உன் பாதை நடந்தேன்**
**எனக்காக பலியாகும் என் தெய்வமே**
**உனைப்போல நிதம் வாழும் வரம் தாருமே. உனைத்தேடி வந்தேன்...**

## ஒன்பதாம் நிலை

# இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்

**ஜெபம்** : இனிய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றி நிறைந்த அஞ்சலி செலுத்துகிறோம்.
அது ஏனென்றால், பாரமான சிலுவையை சுமந்து படைப்பனைத்தையும் மீட்டு இரட்சித்தீர்.

**கலங்கிய குரலில் கல்வாரி மலை** : நான் தான் கல்வாரி மலை பேசுகிறேன்.
வானத்துக் கதிரவனாய் பிறந்திருந்தால், உலகிற்கு ஒளி தந்து வாழ்ந்திருப்பேன்.
வற்றாத நதியாகப் பிறந்திருந்தால், ஊரெங்கும் ஓடி, வளம்சேர்த்து மகிழ்ந்திருப்பேன்.

உலவும் காற்றாகப் பிறந்திருந்தால், தென்றலாய் வீசிக் குளிர்வித்திருப்பேன்.
இப்படி மலையாக நின்று, தனிமைத்துயரில் தவிக்கும் வேளையில்,
என் மலையெங்கும் குருதி வழிய,
வழியெங்கும் அடித்து துவைக்கப்பட்ட கந்தைத் துணியாக
அந்த மனிதருள் மாணிக்கத்தை என் மலைமீது வதைத்தார்கள்.
மூன்றாவது முறையாக கால் இடறி அவர் விழுந்த நிலை கண்டு
மலையாகிய நானே மனம் வெதும்பித் துயரில் தவிக்க
அங்கு மலைபோல பலர் நின்று வேடிக்கை பார்த்திருந்தனர்.
நீங்களும் இவர்களுள் ஒருவர்தானா?
சக மனிதர்கள் வதைபடும் போது, தூரம் நின்று வேடிக்கைப் பார்த்து,
பாவம் என்று பரிதாப வார்த்தைகளை உதிர்த்துவிட்டு,
எதுவுமே நடக்காதது போல், சுவடுகள் பதியாமல் மறைவது மனிதத்தன்மையா?
பிற உயிரும் தன்னுயிர் போல் எண்ணி உறுகுவதுதானே மனிதம்.
இயன்றதைச் செய்து, இயலாத போதும் உடனிருந்து தேற்றுவது தானே மனிதம்.
கண்முன்னே நிகழ்ந்ததைக் காணாதவர் போல்,
உள்ளத்தில் உருத்துவதை உணராதவர் போல்,
மனிதாபிமானமே இல்லாதவர் போல் வாழ்ந்தது போதும்,
உள்ளங்களில் சுயநல இருள் விலக,
தொண்டென்னும் விளக்கேற்றி மனிதத்தை அணையாது காப்போம்.

**மன்றாட்டு** : அன்பு இயேசுவே, எங்கள் வாழ்க்கையின் தடுமாற்றங்களின் போது
விழுந்துகிடப்பதில் நாங்கள் சுகம் கண்டுவிடாமல்,
முயன்று, துணிந்து, எழுந்து நடந்திட உமதருள் தாரும்.

**ஜெபம்** : எங்கள் பேரில் தயவாயிரும் ஆண்டவரே எங்கள் பேரில் தயவாயிரும்
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால்
நித்திய சமாதானத்தில் இளைப்பாருவார்களாக.

**களைந்தாறோ உடைகள் கறையாகும் இமைகள்**
**கதறாதோ மனிதம் உன் நிலை பார்க்கையில் (காண்கையில்)**
**உனைத்தேடி வந்தேன், உன் பாதை நடந்தேன்**
**எனக்காக பலியாகும் என் தெய்வமே**
**உனைப்போல நிதம் வாழும் வரம் தாருமே. உனைத்தேடி வந்தேன்...**

### பத்தாம் நிலை

# இயேசுவின் ஆடைகளைக் களைகிறார்கள்

**ஜெபம்** : இனிய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றி நிறைந்த அஞ்சலி செலுத்துகிறோம்.
அது ஏனென்றால், பாரமான சிலுவையை சுமந்து படைப்பனைத்தையும் மீட்டு இரட்சித்தீர்.

**இயேசு பேசுகிறார்** : காறி உமிழ்ந்தார்கள், தாங்கி கொண்டேன்…..
கசையால் அடித்தார்கள், பொறுத்துக் கொண்டேன்….
முள்ளால் செய்த முடி சூட்டினார்கள், ஏற்றுக் கொண்டேன்…
சிலுவையை சுமத்தி சித்ரவதை செய்தார்கள், சுமந்து கொண்டேன்…..
ஆனால், நிறைவாக… செய்த கொடுமைகள் போதாதென்று
என் ஆடைகளைக் களைந்து, என் மரியாதையை அடகுவைத்து,
என் தன்மானத்தை சிலுவையில் அறைகிறார்கள்.
அவர்கள் உரிந்தெடுத்தது இரத்தத்தில் தொய்ந்து
உடலோடு ஒட்டியிருந்த என் ஆடைகளையல்ல.
என் உடலோடும், உணர்வோடும் இரண்டரக் கலந்திருந்த
என் தன்மானத்தையும், சுயமரியாதையையும், மனித உரிமையையும் அல்லவா!
நண்பர்களே! எங்கெல்லாம் மனித மாண்புக்கு எதிரான நிகழ்வுகள் நடந்தேருகின்றனவோ,
அங்கெல்லாம் என் ஆடைகள் பலவந்தமாகக் களையப்படுகின்றன.
எங்கெல்லாம் சாதி, மதம், பணம், பதவி என்ற பெயரால்
மனிதம் கூறுபோடப்பட்டு, நசுக்கப்படுகின்றதோ,
அங்கெல்லாம் நான் ஆடையிழந்து அவமானப்படுகிறேன்.
எனை உடுத்தி மனிதத்தை உயர்த்துங்கள்.

**மன்றாட்டு** : அன்பு ஆண்டவரே, உமக்கு நேர்ந்த அவமானம் கண்டு உருகும் நாங்கள்
எங்கள் குடுபங்களிலும், சமூகத்திலும் மனிதத்தை அவமானப்படுத்தாமல்
மனித மாண்பையும், பிறர் நலத்தையும் பேணும் வரமருளும்.

**ஜெபம்** : எங்கள் பேரில் தயவாயிரும் ஆண்டவரே எங்கள் பேரில் தயவாயிரும்
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால்
நித்திய சமாதானத்தில் இளைப்பாருவார்களாக.

**கூர் ஆணி எடுத்து திருக்கைகள் துளைத்து**
**சிலுவைக்குத் திருமேனி பலியானதோ**
**உனைத்தேடி வந்தேன், உன் பாதை நடந்தேன்**
**எனக்காக பலியாகும் என் தெய்வமே**
**உனைப்போல நிதம் வாழும் வரம் தாருமே. உனைத்தேடி வந்தேன்…**

## பதினொன்றாம் நிலை

# இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்

**ஜெபம்** : இனிய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றி நிறைந்த அஞ்சலி செலுத்துகிறோம்.

அது ஏனென்றால், பாரமான சிலுவையை சுமந்து படைப்பனைத்தையும் மீட்டு இரட்சித்தீர்.

**ஆணிகள் அழுகின்றன :** மாசற்ற இயேசுவின் தசையைத் திண்று, குறுதியைப் பருகும்
முதல் வாய்ப்பினைப் பெற்ற கூர்மையான ஆணி பேசுகிறேன்.
உழைக்கவும், ஆழமான பிணைப்புகளை உறுவாக்கவும் தானே
நாங்கள் ஆணிகளாகப் படைக்கப்பட்டோம்.
கருணையே உருவான இயேசுவின் கைகளையும், கால்களையும்
துளைப்பதற்கு எங்களைப் பயன்படுத்திவிட்டார்களே இந்தக் கொடிய மனிதர்கள்.
பார்வையற்றோரையும், நோயுற்றோரையும் தொட்டு குணமாக்கி
மறுவாழ்வு தந்தவரின் கரங்களில் - ஆணிகள்.
நடந்து சென்ற பாதையெல்லாம், நதியாய் வளம் சேர்த்த கால்களில் ஆணிகள்.
இன்றும், உங்கள் கரங்களிலும், கால்களிலும் தான் எத்தனை ஆணிகள்
உங்களை செயலிழந்து போகச் செய்து கொண்டிருக்கின்றன.
வன்முறை – அமைதியின் மீது அறையப்படும் ஆணி.
பொய் - நம்பிக்கையின் மீது அறையப்படும் ஆணி.
பொறாமை – அன்பின் மீது அறையப்படும் ஆணி.
இரக்கமின்மை – மனித நேயத்தின் மீது அறையப்படும் ஆணி.
இப்படி மனிதத்தைச் செயலிழந்துபோகச் செய்யும் ஆணிகளைக் களைந்து எரிந்துவிட்டு
இறைமகன் இயேசுவின் மதிப்பீடுகளால் உங்களைப் பிணைத்துக் கொள்ளுங்கள்.
இயேசுவின் உண்மை சாட்சிகளாய் என்றும் வாழுங்கள்.

**மன்றாட்டு :** அன்பான இறைவா! விமர்சனம் என்கிற பெயரில்
அடுத்தவர்களை ஆணிகொண்டு அறையாமல்
உண்மையான அன்பு செய்து வாழும் உயர்ந்த உள்ளத்தைத் தந்தருளும்.

**ஜெபம் :** எங்கள் பேரில் தயவாயிரும் ஆண்டவரே எங்கள் பேரில் தயவாயிரும்
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால்
நித்திய சமாதானத்தில் இளைப்பாருவார்களாக.

**சிவக்காதோ இமைகள் சிதையாதோ விழிகள்**
**உயிர் ஈந்து மரித்தாயே மலைமீதிலே**
**உனைத்தேடி வந்தேன், உன் பாதை நடந்தேன்**
**எனக்காக பலியாகும் என் தெய்வமே**
**உனைப்போல நிதம் வாழும் வரம் தாருமே. உனைத்தேடி வந்தேன்...**

## பன்னிரண்டாம் நிலை

# இயேசு சிலுவையில் உயிர்விடுகிறார்

**ஜெபம் :** இனிய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றி நிறைந்த அஞ்சலி செலுத்துகிறோம்.
அது ஏனென்றால், பாரமான சிலுவையை சுமந்து படைப்பனைத்தையும் மீட்டு இரட்சித்தீர்.

பாடல் : ஏன் என்னைக் கை நெகிழ்ந்தீர்! இறைவா!
ஏன் என்னைக் கை நெகிழ்ந்தீர்!

மெய்யாகவே அவர் நம் பிணிகளைத்தாங்கிக் கொண்டார்.
நம் துன்பங்களைத் தன்மேல் சுமந்து கொண்டார்.
அவரே நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார்.
நம் செயல்களுக்காக அவர் நொறுக்கப்பட்டார்.
நமக்கு நிறைவாழ்வு அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார்.
அவர் தம் காயங்களால் நாம் குணமடைகிறோம்.

பாடல் : தந்தையே உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்.
தந்தையே உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்.

**மன்றாட்டு :** எமக்காக உம் மகனையே கையளித்த இறைவா
உமது மகனின் இறப்பை நினைத்து அழுது புலம்பி, அமைதியாகச் சென்று விடாமல்,
எங்களுடைய முரண்பட்ட வாழ்வை நினைத்து கண்ணீர்வடித்து,
வாழ்க்கைப் பாதையை சீரமைத்துக் கொள்ளும் உள்ளத் துணிவைத் தந்தருளும்.

**ஜெபம் :** எங்கள் பேரில் தயவாயிரும் ஆண்டவரே எங்கள் பேரில் தயவாயிரும்
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால்
நித்திய சமாதானத்தில் இளைப்பாருவார்களாக.

**மரியன்னை மடியில் கிடந்தாயோ இறவை**
**துயில் கொண்டு துயர் போக்கத் துணிந்தாயய்யா**
**உனைத்தேடி வந்தேன், உன் பாதை நடந்தேன்**
**எனக்காக பலியாகும் என் தெய்வமே**
**உனைப்போல நிதம் வாழும் வரம் தாருமே. உனைத்தேடி வந்தேன்...**

பதிமூன்றாம் நிலை

# இயேசுவின் உடல் அன்னையின் மடியில் கிடத்தப்படுகிறது

**ஜெபம் :** இனிய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றி நிறைந்த அஞ்சலி செலுத்துகிறோம்.
அது ஏனென்றால், பாரமான சிலுவையை சுமந்து படைப்பனைத்தையும் மீட்டு இரட்சித்தீர்.

அன்பு சீடர் பேசுகிறார் : இயேசுவின் தோள்களில் சாய்ந்திடும் பாக்கியம் பெற்றதால்
எனை எல்லோரும் இயேசுவின் அன்புச் சீடன் என்று அழைத்தார்கள்.
அவரோடு இராவுணவில் அப்பம் பகிர்ந்துண்டு,
அவர் தம் கிண்ணத்தில் பருகி, அவரோடு ஒட்டி உறவாடிய எனக்கு
அவருடைய துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள வழி தெரியவில்லை.
தூரம் நின்று அவர் பட்ட பாடுகளைப் பார்த்து பதறி,
அவரடைந்த துயரம் கண்டு துடித்து, கல்வாரி வரை பின்தொடர்ந்து வந்தவன்.
கடைசி துளி உயிருள்ள வரையிலும்
தந்தையே இவர்கள் தாங்கள் செய்வதை அறியாது செய்கிறார்கள்
இவர்களை மன்னியும் என்று தனக்கு கொடுந்தீமை செய்தவர்களையும்
மனதார மன்னித்த அந்த மாசற்ற இறைமகன்
உயிரற்ற உடலாய் ஓய்ந்து கிடக்கிறார் மரியன்னையின் மடியில்.
இனியவர்களே, நான் கிறிஸ்தவன், நான் கிறிஸ்தவள்
என்று மார்தட்டிச் சொல்லிக் கொள்ளவதிலும்,
கையிலும் கழுத்திலும் சிலுவைகளையும், திருஉருவங்களையும் அணிந்து கொள்வதிலும்,
நாம் காட்டுகின்ற ஆர்வத்தையும், ஆசையையும் பிறரை மன்னிப்பதில் காட்டுகின்றோமா?
மன்னிப்பு என்ற மகத்தான மருந்து பூசப்படாததால்
இன்று ஆறாத இரணமாகி, பிணைக்கமுடியாத தீவுகளாகிப்போன உறவுகள் எத்தனை?
இயேசுவின் உடலை உண்டு, இரத்தத்தைப் பருகி வாழும் ஒவ்வொருவரும்
உள்ளத்தில் புதைந்து கிடக்கின்ற வன்மத்தையும், குரோதத்தையும் களைந்து
மன்னிப்பதையும், ஏற்றுக் கொள்வதையும் நம் வாழ்வியல் முறையாக்குவோம்.

**மன்றாட்டு :** நிறைவாழ்வின் ஊற்றே எம் இறைவா
கடமைக்காக பணி செய்தோம்,
பேருக்கு வாழ்க்கை நடத்தினோம் என்று வாழாமல்
பொறுப்போடு, மகிழ்வோடு, நிறைவோடு வாழும் வரம் தருவாய்.

**ஜெபம் :** எங்கள் பேரில் தயவாயிரும் ஆண்டவரே எங்கள் பேரில் தயவாயிரும்
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால்
நித்திய சமாதானத்தில் இளைப்பாருவார்களாக.

**தலைசாய்க்க இடமே இல்லாத இறைவா**
**அடைத்தாரோ உனை அந்தக் குகை கொள்ளுமோ**
**உனைத்தேடி வந்தேன், உன் பாதை நடந்தேன்**
**எனக்காக பலியாகும் என் தெய்வமே**
**உனைப்போல நிதம் வாழும் வரம் தாருமே. உனைத்தேடி வந்தேன்...**

பதினான்காம் நிலை

## இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்

**ஜெபம்** : இனிய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றி நிறைந்த அஞ்சலி செலுத்துகிறோம்.
அது ஏனென்றால், பாரமான சிலுவையை சுமந்து படைப்பனைத்தையும் மீட்டு இரட்சித்தீர்.

**கல்லறை பேசுகிறது** : சமரசம் உலாவும் இடம் நான்.
அரசன் முதல் ஆண்டி வரை எல்லோரும் ஆடிய ஆட்டமெல்லாம்
அடங்குமிடம் கல்லறையாகிய என்னில் தான்.
கயமையே உருவமாய், வாழ்க்கையைக் குழைப்பதே வேலையாய்,
என்று கல்லறையில் வைக்கப்படவேண்டியவர் பலர் இங்கு உலவித்திரிய,
பேசிய வார்த்தைகளாலும், ஆற்றிய செயல்களாலும்
சென்ற இடமெல்லாம் நன்மையே செய்து, வாழ்வை நிறைவாக வழங்கியர்
இங்கு கல்லறையாகிய என்னில் வைக்கப்படுகிறார்.
அவருடைய கொட்டத்தை அடக்கிவிட்டோம், ஆட்டத்தை முடக்கிவிட்டோம்
என்ற மமதையோடு சென்றவர்களுக்குத் தெரியவில்லை
ஒரு விடியலை அவர்கள் கல்கொண்டு அடைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள் என்பதை.
மனிதர்களே, கருவறைக்கும் கல்லறைக்கும் இடையே
தோற்றம், மறைவு என்ற இருமலைகளுக்கிடையே
வாழ்க்கை என்கிற கயிறு கட்டிப் பயணம் செய்கிறீர்கள்.
கடக்கவேண்டிய பாதை இன்னும் வெகு தூரம் இருக்கிறது என்கிற சிந்தனையால் தான்
நடக்கவேண்டிய பாதை தடுமாறி சேராத இடமெல்லாம் சென்று சேர்கிறீர்கள்.
நிறைவான பாதைகளில் இனிதாகப் பயணம் செய்வதை விட்டுவிட்டு
பாழான பாதைகள் தேர்ந்து, பாவச் சுமைகளைச் சுமந்து, வருந்திப் பயணம் செய்கிறீர்கள்.
வாழ்க்கையை நிறைவாக வாழக் கற்றுத்தந்தவர் பரமன் இயேசு
அவர்வழியில் உங்கள் பாவச்சுமைகளையும், தீய குணங்களையும்
கல்லறைகளில் புதைத்து புதுமனிதர்களாய், கிறிஸ்துவின் சாட்சிகளாய்,
இறைவனின் பிள்ளைகளாய் என்றும் வாழ்ந்திருங்கள்.

**மன்றாட்டு :** சமத்துவ நாயகனே இறைவா!
பிரிவினைகளை, பேதங்களைக் கடந்து
சமத்துவத்தை, சகோதரத்துவத்தை மதித்து வாழும்
உயர்ந்த உள்ளத்தைத் தந்தருளும்.

**ஜெபம் :** எங்கள் பேரில் தயவாயிரும் ஆண்டவரே எங்கள் பேரில் தயவாயிரும்
இறந்த விசுவாசிகள் இறைவனுடைய இரக்கத்தினால்
நித்திய சமாதானத்தில் இளைப்பாருவார்களாக.

# நிறைவுரை

இயேசுவில் பிரியமானவர்களே,
ஒவ்வொரு சிலுவைப் பாதையிலும்
மீட்பராம் இயேசுவின் பாடுகளை நினைவு கூறுகின்ற நாம்
நம் வாழ்க்கைப் பாதையில்
நாம் அனுதினமும் சுமக்கின்ற சிலுவைகளை
உவந்து ஏற்று, சுமந்து வாழும்
வலிமையையும், மன உறுதியையும்
நம்மில் வளர்த்துக் கொள்வோம்.
சிலுவைப் பாதைச் சிந்தனைகள்
நம் சிந்தனைகளைத் தூய்மையாக்கி,
செயல்களை செம்மைப்படுத்தி,
வாழ்க்கையை நெறிப்படுத்தட்டும்.
என்றும் இயேசுவின் உண்மை சீடராய் வாழ்ந்திருப்போம்.